# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2019 ஜீலை மாதம் 19 ஆம் தேதி வெள்ளிகிழமை மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:-** **திரு.** A.W.சையத் முஸ்தபா கமால், B.Sc.,
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## கூட்ட பொருள்கள்

**பொருள் எண்-1**

கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையர் அவர்களின் ஜீன் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்-2**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2019-2020- ன் கீழ் நகராட்சி பகுதியில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 124 பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்ள இந்நகராட்சியின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.2456/2018/எச்1 ன் படி 28.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 16.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை நாளிதழில் வெளியீடு செய்து பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/2456 /2018)**

**பொருள் எண்-3**

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 யினை அமுல்படுத்த துணை விதிகள் தயாரிக்கப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண்.94/2017 நாள்:29.06.2017ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு 19.07.2017 அன்று தினபூமி நாளிதழில் பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை 15 தினங்களுக்குள் நகராட்சிக்கு தெரிவிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. அறிவிப்பு வெளியாகி 15 நாட்கள் முடிவடைந்த நிலையில் பொது மக்களிடமிருந்து எவ்விதமான ஆட்சேபனைகளும் வரப்பெறவில்லை. எனவே, பிளாஸ்டிக்கழிவு மேலாண்மை 2016ன் துணை விதிகளை ஊர்ஜிதம் செய்து விழுப்புரம் மாவட்ட அரசிதழில் வெளியிட்டு கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் அமுல்படுத்தவும், அதற்காக விருத்தாச்சலம் கிளை மேலாளர் அரசு கிளை அச்சகம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கேட்பின் படி தொகைரூ.10500/-செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்
3. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று கிளை மேலாளர் அரசு கிளை அச்சகம் விருத்தாச்சலம் அவர்களுக்கு தொகை ரூ.10500/- வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1235/2017/அ4)**

**<u>பொருள் எண்-4</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித எண் கடித ந.க.எண்.15415/2013/குவ1, நாள் 12.07.2019ல் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மழைநீர் சேகரிப்பு திட்டம் செயலாக்கம் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைக்கப்பட்டுள்ளதா என தல ஆய்வு செய்ய குழு அமைக்கவும், அவ்வாறு மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைக்கப்பட்ட கட்டடங்களில் அறிவிப்பு நோட்டீஸ் மற்றும் பல்வண்ண ஸ்டிக்கர் (Multi clolor sticker) ஒட்டவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பல்வண்ண ஸ்டிக்கர் தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., திருச்சி என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகைக்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.936/2019/இ1

**<u>பொருள் எண்-5</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி 2019–2020 அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகள் பிரிண்டர்கள் Mattrix பிரிண்டர்கள், சர்வர் என 30 எண்ணிக்கையில் உள்ள கணிணி உபகரணங்களை வருடாந்தர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. விலைப்புள்ளி கோரி அறிவிப்பு கடிதம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3290/2019/இ1

**<u>பொருள் எண்-6</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான நாளாங்காடி மற்றும் சாலையோர கடைகள் சுங்கம் வசூலிக்கும் உரிமம் 2019–2020 ஆண்டிற்கு 11.07.2019ம் அன்று பொது மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு ஏலக்கேள்வி கோரிய விபரம் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கு வைக்கப்படுகிறது.–

| வ. எண் | தொகை செலுத்தியவர்களின் விபரம் / முகவரி (திரு / திருமதி) | ஒருஆண்டுக்கான ஏலக் கேள்வி தொகை ரூ | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ. |
|---|---|---|---|
| 1 | வி.சிவராமன்<br>15/37 கவரைதெரு<br>கள்ளக்குறிச்சி | 40,00,000/- | -- |
| 2 | கே.சங்கர்<br>த/பெ கருணாநிதி<br>29/6 சிறுவங்கூர் ரோடு<br>கள்ளக்குறிச்சி | 40,25,000/- | 40,25,000/- |
| 3 | வடிவேல்<br>த/பெ கிருஷ்ணன்<br>க மாமனந்தல் ரோடு<br>கள்ளக்குறிச்சி | 37,75,000/- | -- |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்டுள்ள ஏலக்கேள்விகளில் உயர்ந்த ஏலக்கேள்வியாக ரூ.40,25,000/–க்கு கோரியுள்ள **திரு.கே.சங்கர் த/பெ கருணாநிதி 29/6 சிறுவங்கூர் ரோடு கள்ளக்குறிச்சி** என்பவரின் ஏலக்கேள்வியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட உயர்ந்த ஏலக்கேள்வியானது கடந்த ஆண்டு ஏலத்தொகையினை காட்டிலும் ரூ.14,80,000/–குறைவாக உள்ளது,மூன்றாண்டு சராசரி காட்டிலும்ரூ.6.95,806/– கூடுதலாக

உள்ளது.மேலும் இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை என்பதாலும் ஆட்கள் கூலி மற்றும் இரசீது அச்சுகூலி ஆகிய செலவினங்கள் இன்றி மேற்படி உயர்ந்த ஏலத்தொகையினை நேரடியாக நகராட்சிக்கு வவருவாய்ஆகும் என்பதால் உயர்ந்த ஏலக்கேள்வி கோரியுள்ள **திரு.கே.சங்கர் த/பெ கருணாநிதி 29/6 சிறுவங்கூர் ரோடு கள்ளக்குறிச்சி** என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் அனுமதிக்கலாம் மேலும் ஒப்படைக்கப்படும் நாள் முதல் **31.03.2021** வரை உரிமம் அனுபவித்துகொள்ள அனுமதிக்கலாம்

**ந.க.எண் 3111/2017/அ2**

## பொருள் எண்-7

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு உரிம இனங்களை 01.04.2019 முதல் 31.03.2021 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்துக் கொள்ள கீழ்கண்ட இனங்களின் **11.07.2019** அன்று ஏலம் கோரப்பட்டதில் வரிசை எண் **1** மற்றும் **2**ல் உள்ள இனங்களுக்கு ஏலம் கோர யாரும் முன்வரவில்லை என்பதால் மறுஏலம் கோரலாம்.

வரிசை எண் **3**ல் குளக்கரைகடைகள் **14,15,16,17,18 21,22** மற்றும் **24** ஆகிய **7** கடைகளை **12.02.2019** அன்று ஏலம் கோரப்பட்டதில் கடை எண்**21,22** மற்றும் **24** ஆகிய கடைகள் தவிர மீதமுள்ள **5** கடைகளை ஏலம் கோர யாரும் முன்வரவில்லை என்பதால் தற்போது **2019–2020**ஆண்டிற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோர மன்ற அனுமதிக்கு வைக்கப்பபடுகிறது.

| வ.எ | ஏல இனம் | 01.04.2019க்கு பிறகு பெறப்பட்ட சொத்து அசல் மதிப்பு சான்று ரூ. | அசல் சொத்து மதிப்பு உள்ளவர்கள் செலுத்த வேண்டிய வைப்பு தொகை | சொத்து மதிப்பு அசல் சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **1** | **தினசரி நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்** | **2,00,000/-** | **1,00,000/-** | **1,75,000/-** |
| **2.** | பேருந்து நிலையத்தில் உள்ள நடைபாதையில் தொலைகாட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்தல் | **2,00,000/-** | **50,000/-** | **1,00,000/-** |
| **3.** | குளக்கரைகடைகள் **14,15,16,17,18** (**5** கடைகள் ) | **2,00,000/-** | **75,000/-** | **1,00,000/-** |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

. (ந-க.எண் 3111/2017/அ3)

## பொருள் எண்-8

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது வறட்சியின் காரணமாக புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் புதியதாக மின் இணைப்பு பெற கூடுதலாக ஒவ்வொரு இனத்திற்கும் தனியே கேட்பு பெற்று மின் இணைப்பு பெற வேண்டியுள்ளதால் **2019–2020** ஆண்டிற்கு உத்தேசமாக ரூ.**50,000/–**க்கான அனுமதிக்க வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந-க.எண் 3714/2019/ **இ1**)

## பொருள் எண்-9

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையுள்ள பகுதிகளில் தனியார் வாடகை டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி நாள். 12.02.2019ல் (தீர்மானம் எண். 438/2019 நாள். 01.03.2019) ரூ. 4.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 22.02.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 0.00% மதிப்பீட்டு தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி என்பவருக்கு 22.02.2019ல் பணி உத்தரவு வழங்கி, தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்காணும் குடிநீர் விநியோகம் செய்யும் பணியில், நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகை தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும், இந்நகரப் பகுதியில் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலும், தற்போது நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி சரியான முறையில் குடிநீர் வரப்பெறவில்லை. இதனால் வார்டு எண். 01 முதல் 07 வரையுள்ள பகுதிகளில் தனியார் வாடகை டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, தனியார் வாடகை டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்து, குடிநீர் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, குடிநீர் தட்டுப்பாட்டினை தவிர்த்திடும் பொருட்டு, குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்து, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி என்பவர் கொடுத்துள்ள 0.00% மதிப்பீட்டு தொகை ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்திடவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ. 9,00,000/- (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி எடுத்துள்ள ஒப்பந்ததாரர், "திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி" என்பவரின் சம்மத கடிதம் பெற்று, குடிநீர் விநியோகம் தொடர்ந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று, குடிநீர் விநியோகம் செய்ததை அங்கீகரிக்கலாம்.
4. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 573 / 2019 / இ1 )**

## பொருள் எண்-10

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் தனியார் வாடகை டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி நாள். 12.02.2019ல் (தீர்மானம் எண். 438/2019 நாள். 01.03.2019) ரூ. 4.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 22.02.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 0.00% மதிப்பீட்டு தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, M/s. லக்ஷனா எண்டர்பிரைசஸ், கள்ளக்குறிச்சி என்பவருக்கு 22.02.2019ல் பணி உத்தரவு வழங்கி, தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்காணும் குடிநீர் விநியோகம் செய்யும் பணியில், நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகை தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும், இந்நகரப் பகுதியில் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலும், தற்போது நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி சரியான முறையில் குடிநீர் வரப்பெறவில்லை. இதனால் வார்டு எண். 08 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் தனியார் வாடகை டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, தனியார் வாடகை டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்து, குடிநீர் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, குடிநீர் தட்டுப்பாட்டினை தவிர்த்திடும் பொருட்டு, குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்து, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் M/s. லக்ஷனா எண்டர்பிரைசஸ், கள்ளக்குறிச்சி என்பவர் கொடுத்துள்ள 0.00% மதிப்பீட்டு தொகை ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்திடவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ. 9,00,000/- (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)–க்கு

மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி எடுத்துள்ள ஒப்பந்ததாரர், "M/s. லக்ஷனா எண்டர்பிரைசஸ், கள்ளக்குறிச்சி" என்பவரின் சம்மத கடிதம் பெற்று, குடிநீர் விநியோகம் தொடர்ந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று, குடிநீர் விநியோகம் செய்ததை அங்கீகரிக்கலாம்.
4. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 573 / 2019 / இ1 )**

**<u>பொருள் எண்11</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் தனியார் வாடகை டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி நாள். 12.02.2019ல் (தீர்மானம் எண். 438/2019 நாள். 01.03.2019) ரூ. 4.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 22.02.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 0.00% மதிப்பீட்டு தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி என்பவருக்கு 22.02.2019ல் பணி உத்தரவு வழங்கி, தற்போது குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்காணும் குடிநீர் விநியோகம் செய்யும் பணியில், நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகை தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும், இந்நகரப் பகுதியில் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலும், தற்போது நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி சரியான முறையில் குடிநீர் வரப்பெறவில்லை. இதனால் வார்டு எண். 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் தனியார் வாடகை டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, தனியார் வாடகை டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்து, குடிநீர் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, குடிநீர் தட்டுப்பாட்டினை தவிர்த்திடும் பொருட்டு, குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்து, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி என்பவர் கொடுத்துள்ள 0.00% மதிப்பீட்டு தொகை ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்திடவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ. 9,00,000/- (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி எடுத்துள்ள ஒப்பந்ததாரர், "M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி" என்பவரின் சம்மத கடிதம் பெற்று, குடிநீர் விநியோகம் தொடர்ந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று, குடிநீர் விநியோகம் செய்ததை அங்கீகரிக்கலாம்.
4. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 573 / 2019 / இ1 )**

**<u>பொருள் எண்-12</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி நாள் 10.09.2018ல்(தீர்மான எண்.349/2018 நாள் 30.11.2018) ரூ.9.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 0.31ரூ மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, கலை இன்ஜினியரிங் ஒர்க்ஸ் கள்ளக்குறிச்சி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கி, பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அன்னாருக்கு 12/2018ல் வழங்கப்பட்ட தொகையில் ரூ.9,99,429/– க்கு பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.9,00,000/–க்கான பட்டியல் தொகை வழங்கப்பட்டு நிலுவைத்தொகை ரூ.99,429/– நிலுவையில் உள்ளது.

மேலும், இந்நகரப் பகுதியில் பருவ மழை பொய்த்து விட்ட காரணத்தினாலும் தற்போது நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி சரியான முறையில் குடிநீர் வரப் பெறவில்லை. இதனால் நகராட்சி பகுதிகளிலுள்ள சிறுமின் விசைப்பம்புகளின் மூலமாக தண்ணீர் விநியோகம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும் தற்போது நிலவும் கடும் வறட்சியின் காரணமாக, ஆழ்துளை கிணற்றின் நீர்மட்டம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகின்றது. மேலும், மேற்படி சிறுமின் விசைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்து, குடிநீர் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யப்படவேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி பணியினை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் பணிகள் மேற்கொள்ளலாம்.

எனவே, குடிநீர் தட்டுப்பாட்டினை தவிர்த்திடும் பொருட்டு குடி.ர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்து, பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட கலை இன்ஜினியரிங் ஒர்க்ஸ் கள்ளக்குறிச்சி என்பவர் கொடுத்துள்ள 0.31% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.4,95,000/– ( ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணூற்றி ஐந்தாயிரம் மட்டும்) க்கு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி எடுத்துள்ள ஒப்பந்ததாரர், கலை இன்ஜினியரிங் ஒர்க்ஸ் கள்ளக்குறிச்சி என்பவர் சம்மத கடிதம் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருத்தில் கொண்டும், தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று, பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
4. கேட்பு தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1412/2019/இ1

# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2019 ஜீலை மாதம் 31ஆம் தேதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:-** **திரு.** A.W.சையத் முஸ்தபா கமால், B.Sc.,
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## கூட்ட பொருள்கள்

**பொருள் எண்-1**

திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016-ன் படி கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் நகரின் தூய்மையை பேணிகாக்கும் பொருட்டு குப்பை இல்லா நகரமாக மாற்ற குப்பைகள் உருவாகும் இடத்திலிருந்து உரமாக்கும் வரை மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளையும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கொள்கை மற்றும் உத்திகளாக தயாரிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் வேலூர் அவர்களின் 02.07.2019 ஆம் தேதிய ஆய்வு கூட்டத்தில் இத்திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கொள்கை மற்றும் உத்திகளை ஊர்ஜிதம் செய்து விழுப்புரம் மாவட்ட அரசிதழில் வெளியிட்டு கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் அமுல்படுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியல் தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.406/2017/எச்1)**

**பொருள் எண்-2**

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் 2019–ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள் தயாரிக்கப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண்.425/2019 நாள்:01.03.2019ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு 25.06.2019 அன்று மக்கள் குரல் நாளிதழில் நெகிழி பயன்படுத்துதல் குறித்து அபராத தொகை விதிப்பதற்கு பொதுமக்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை 15 தினங்களுக்குள் நகராட்சிக்கு தெரிவிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும், அறிவிப்பு வெளியாகி 15 நாட்கள் முடிவடைந்த நிலையில் பொது மக்களிடமிருந்து எவ்விதமான ஆட்சேபனைகளும் வரப்பெறவில்லை. எனவே, 2019–ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள் ஊர்ஜிதம் செய்து விழுப்புரம் மாவட்ட அரசிதழில் வெளியிட்டு கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் அமுல்படுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்
3. பெறப்படும் பட்டியல் தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1325/2019/எச்1)**

**<u>பொருள் எண்-3</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக ஈப்பு வாகனம் N32AV2277 என்ற வாகனத்திற்கு பேட்டரி பணிகள் மேற்கொள்ளவும் ஒயரிங் மற்றும் விளக்குகள் ஆகியவை பொருத்தி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,000/–க்கு நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1188/2013/இ1)**

**<u>பொருள் எண்-4</u>**

விழுப்புரம் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.பிடி2/6191/2015 நாள்:-15.04.2019 ல் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் கொள்ளை நோய் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பணிக்கு இந்நகராட்சிக்கு 10 நபர்கள் (கொசுபுழு ஒழிப்பு பணியாளர்கள்) 60 நாட்களுக்கு தற்காலிகமாக பணிபுரிய இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.31 நாள்:- 28.05.2019 அனுமதி அளிக்கப்பபட்டு 10 நபர்கள் பணிபுரிந்து வந்தனர். தற்போது 08.07.2019 வுடன் 60 நாட்கள் முடிவுறுவதால் விழுப்புரம் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கடித ந.க.எண். பிடி2/6191/2015 நாள்:- 14.06.2019 ல் மேற்கண்ட பணி மேற்கொள்ள 10 நபர்கள் இந்நகராட்சிக்கு (கொசுபுழு ஒழிப்பு பணியாளர்கள்) 60 நாட்களுக்கு தற்காலிகமாக பணிபுரிய நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சியில் மேற்கண்ட பணிக்காக 10 நபர்கள் (DBC) பணியாளர்களை ஏற்கனவே பணிபுரிந்த ராசி மகளிர் சுய உதவி குழு மூலம் 10 நபர்களை 09.07.2019 முதல் 60 நாட்கள் பணிபுரியவும், கொசுபுழு ஒழிப்பு பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.275/- வீதம் ஊதியம் வழங்கிடவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/1490 /2019)**

**<u>பொருள் எண்-5</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் பயன்படுத்தி வரும் ஈப்பு வாகனம் TN32AV2277 என்ற வாகனத்தில் உள்ள பேட்டரி, ஒயரிங் பணிகள் விளக்குகள் போன்ற பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஸ்ரீ விநாயகா எலட்ரிக்கல் | செல்வகுமார் ஆட்டோ எலக்ரிக்கல் | லட்சுமி ஆட்டோ எலக்ரிக்கல் |
|---|---|---|---|---|
| 1 | Bolero Jeep 70 AA+ Battary Amaran | 7200/– | 7250/– | 7000/– |
| 2 | 100/90 Phipns Head Light Bulb 2 nos. | 420/– | 440/– | 380/– |
| 3 | 3 Pintype Light holder 2 nos. | 230/– | 250/– | 190/– |
| 4 | Earthwire light (10n) | 450/– | 470/– | 420/– |
| | Total | 8300/– | 8410/– | 7990/– |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள லட்சுமி ஆட்டோ

எலட்ரிக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1188/2013/இ1)**

**பொருள் எண்-6**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் Bio-Mining பணிகள் நடைபெற்று வரும் நிலையில் தற்போது குப்பைகள் தரம் பிரிக்க தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு Fitting செய்யும் பணிகள் நடைபெற்று வருவதால் அதற்கான மின் இணைப்பு வழங்க கோரப்பட்டதலில் உதவி மின் பொறியாளர் கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண்.099/2019 நாள் 20.07.2019ல் ரூ.53600/– செலுத்தக் கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**( ந.க.எண். 2220/ 2019 / இ1 )**

**பொருள் எண்-7**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான BEML JCB TN32 AV 0727 என்ற வாகனத்திற்கு M/s.தி நீயூ இந்தியா அசூரன்ஸ் கோ லிட் , கள்ளக்குறிச்சி நிறுவனத்தில் பாலிசி எண்.71300631180100001369 ன் பிரிமீயம் 27.07.2019வுடன் முடிவடைவதால் மீண்டும் அதனை புதுப்பிக்க மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.14333/- செலுத்திட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தொகை ரூ.14333/- M/s.தி நீயூ இந்தியா அசூரன்ஸ் கோ லிட், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3.பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 3354 /2019/எச்1)**

**பொருள் எண்-8**

கள்ளக்குறிச்சி நகராட்சி 2018–2019க்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**( ந.க.எண். 3655/ 2019 / சி1 )**

**பொருள் எண்-9**

**வேலையின் பெயர்:-** நகராட்சி பகுதியில் SBM திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு 27 மின்கலனில் இயங்கும் (BOV) வாகனத்திற்கு பைபர் பின்கள் (80 லிட்டர் கொள்ளவு) 200 எண்ணிக்கையில் சப்ளை செய்தல் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் நகர்மன்ற தீர்மான எண்.44 நாள் :-28.06.2019 ல் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் 24.07.2019 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | ஸ்ரீ நாவலாடி அசோசியேட்ஸ், நாமக்கல் | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பொரேஷன், |
|---|---|---|---|

| | | | நாமக்கல் |
|---|---|---|---|
| 1 | Supply and Delivery of 80 lit Sintex Dust Bins for the Top Dia-475mm, Bottom Dia-370mm, Height-770mm and specially moulded projections for extra strength. 2 No of Twist type lockable lid fixed for the bin using easy lifting and easy unloading of waste. The bin have fully openable and reusable, washable. | 1184.00 | **1142.00** |

**அலுவலக குறிப்பு:-**

1.மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. **ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பொரேஷன், நாமக்கல்** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிஉத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2831 /2019/எச்1)**

**பொருள் எண்-10**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் **06.02.2019** அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டததில் கள்ளக்குறிச்சி மாவட்டம் தனியாக பிரித்தது குறித்து கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்கு தேவையான பந்தல்கள் குடிநீர் வசதி மேடை வசதி மைக் செட் வசதி போன்ற பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி மன்ற தீர்மான எண்.**450/2019** நாள் **20.02.2019**ல் ரூ.1,50,000/—(ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்நதுது பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் விபரம் | RTS சப்பையர்ஸ் கள்ளக்குறிச்சி | AS அண்ணாமலை சப்ளையர்ஸ் | ஸ்ரீ அம்மன் டெக்கரேஷன், கள்ளக்குறிச்சி |
|---|---|---|---|---|
| 1 | ஆலோசனை கூட்டத்திற்கு தேவையான பந்தல், சேர், மைக்செட், துணிபந்தல், இதர பணிகள் | **101150/—** | **107430/—** | **107000/—** |
| | மொத்தம் | **101150/—** | **107430/—** | **107000/—** |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள RTS என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதையும் ஏற்று பட்டியல் தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 219/ 2019 / இ1)**

## பொருள் எண்-11

கள்ளக்குறிச்சி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு மூ.மு.எண். 25032/2018/பி3 நாள். 24.10.2018ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, 15.07.2019 ஆம் தேதியன்று ONLINE / OFFLINE முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதியினை நிர்ணயம் செய்து, தகுதி பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் விலை விகித (Price Bid) ஒப்பந்தப்புள்ளிகளை 22.07.2019 காலை 11.00 மணிக்கு திறக்கப்பட்டதை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | ஒரு வருட காலத்திற்கு 124 பணியாளர்கள் மூலம் துப்புரவு பணியினை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளுதல் (Outsourcing) | ரூ. 191.99 | **M/s. GREENWARRIOR**, 14, 4th Street, K.K. Nagar, Manavala Nagar, Tivallur-602002 | -0.04 % குறைவான ஒப்பந்தப்புள்ளி |
| | | | **M/s. CITY CLEAN**, 2/18, Karthikapuram, Mottur Village, Tiruttani-631209 | +2.55 % அதிகமான ஒப்பந்தப்புள்ளி |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் "**M/s. GREENWARRIOR**, Tivallur-602002" என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி, **-0.04%**-க்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்.

எனவே, திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர, அவசியத்தினை கருதி **-0.04%**-க்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, "**M/s. GREENWARRIOR**, Tivallur-602002" என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. "**M/s. GREENWARRIOR**, Tivallur-602002" என்ற நிறுவனத்தார் குறைவாக கொடுத்துள்ள **-0.04%** என்ற ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர, அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
3. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
4. மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2456 / 2018 / எச்1 )**

## பொருள் எண்-12

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **மாநில பேரிடர் மேலாண்மை நிதி 2019**-ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 11.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | மிளகாய்தோட்டம் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 01) | ரூ. 2,50,000/- | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.94 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 1.60 % மதிப்பீட்டிற்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அதிகம் |
| 2. | சங்கராபுரம் சாலையில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 07) | ரூ. 2,50,000/- | திரு. N.கணேசன், கள்ளக்குறிச்சி | 1.12 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.16 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | ஏமப்பேர் தென்கீரனூர் சாலையில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 13) | ரூ. 2,50,000/- | திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 0.59 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. வி.ஆர். சாமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் & பில்டர்ஸ், கள்ளக்குறிச்சி | 3.11 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | சுமங்கலி நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 16) | ரூ. 2,50,000/- | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 0.59 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.41 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணிகளின் அவரச, அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.

**( ந.க.எண். 2425 / 2019 / இ1 )**

## <u>பொருள் எண்-13</u>

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் நகர்ப்புற நலிவுற்ற குடும்பங்கள் 8713 பயனாளிகளின் (BPL) விபரங்கள் கள ஆய்வுக்கு சரிபார்க்கும் பொருட்டு , பயனாளிகளின் விண்ணப்பங்களை(ஒவ்வொன்றும் இரண்டு பக்கம்) Download செய்ய வேண்டி உள்ளது. எனவே மேற்கண்ட 8713 விண்ணப்பங்களையும் தனியார் Xerox கடையில் Download செய்து கொடுக்கும் பணி மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.15,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3213 / 2019 / எப்1 )**

## <u>பொருள் எண்-14</u>

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி 2019-2020** ஆம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் விபரப்படி உள்ள பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | மோரைப்பாதை தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 01) | ரூ. 2,50,000/- |
| 2. | ஆண்டாள் நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 21) | ரூ. 2,50,000/- |
| 3. | நாகப்பிள்ளை நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 10) | ரூ. 2,50,000/- |

| | | |
|---|---|---|
| 4. | சுந்தரவிநாயகர் கோவில் தெரு (தும்பி லேத் ஒர்க்ஸ் அருகில்) புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 10) | ரூ. 2,50,000/- |
| 5. | கிராமச்சாவடித் தெருவில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 19) | ரூ. 2,50,000/- |
| 6. | வ.உ.சி. நகர் முதல் பிரதான சாலையில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 02) | ரூ. 2,50,000/- |
| 7. | சித்தேரிக் கரை (டோபிகானா அருகில்) புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 20) | ரூ. 2,50,000/- |
| 8. | ஏமப்பேர் ஜெ.ஜெ. நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 15) | ரூ. 2,50,000/- |
| 9. | அண்ணாநகர் பிரதான சாலை (0/0 M to 0/350 M) தார்சாலையினை புதுப்பித்தல் (வார்டு எண். 12) | ரூ. 9,90,000/- |
| 10. | துருகம் சாலை நுண்உரக்களம் (MCC) மற்றும் மறுசுழற்சிக்குட்பட்ட பொருட்கள் சேகரிக்கும் கூடத்திற்கு (RRC) செல்லும் சாலை பேவர் பிளாக் சாலை அமைத்தல் | ரூ. 9,95,000/- |

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 11. | அண்ணாநகர் பிரதான சாலை மற்றும் கருணாபுரம் காலனியில் சிறுபாலத்தினை மராமத்து பணி செய்தல் | ரூ. 1,75,000/- |
| 12. | தினசரி நாளங்காடியில் மேற்குபுறம் சுற்று சுவர் மற்றும் கேட் அமைத்தல் | ரூ. 4,50,000/- |

மேற்காணும், விவரப்படி உள்ள பணிகளுக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர, அவசியத்தினை கருதி உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3795 /2019/இ1 )**